பட்டா கேட்டு விண்ணப்பித்ததின் அடிப்படையில் பட்டா பெற எழுதும் கடிதம்

**தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழ் செய்யப்படும் விண்ணப்பம்**

பதிவு அஞ்சல் அல்லது விரைவுத் தபால்.

அனுப்புநர் தேதி:

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பெறுநர்

பொது தகவல் அலுவலர்.
தகவல் உரிமைச் சட்டம்-2005
----------------------தாலுக்கா அலுவலகம்
----------------------பின் கோடு

ஐயா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 - பட்டா மாற்றம் . தகவல்கள் கேட்டல்.

பார்வை: பட்டா கேட்டு நான் அனுப்பிய விண்ணப்பம் RPT எண்: . . . . . நாள்: . . . . . . .

1) . . . . . . . . . . நாள் முதல் . . . . . . . . . . நாள் வரை பட்டா கேட்டு தங்கள் அலுவலகத்தில் எத்தனை விண்ணப்பங்கள் வரப்பெற்றன?

2) அவைகளில் எந்த தேதிவரை விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்பட்டுள்ளது?

3) எத்தனை பேருக்கு இன்று (தகவல் அளிக்கின்ற அன்றுவரை) வரை பட்டா வழங்கப்பட்டுள்ளது?

4) கடைசியாக வழங்கப்பட்ட பட்டா எந்த தேதியில் விண்ணப்பித்தவருக்கு வழங்கப்பட்டுள்ளது?

5)பட்டா வழங்கியது தொடர்பான கோப்புகளைப் பார்வையிடவும் தேவையான நகல்கள் எடுக்கவும் அனுமதி வழங்கி நேரம் நாள் தெரிவிக்கவும்.

6) பார்வையில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தின் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தெரிவிக்கும் கோப்பின் நோட்பைல் உட்பட அனைத்துப் பக்கங்களின் ஒளி நகல் வழங்கவும்.

7) பார்வையில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தில் பட்டா வழங்க தேவையான அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளதா? ஆ. இல்லை எனில் அதுபற்றிய தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதா? இ. ஆம் எனில் அதன் நகல் ஒன்று வழங்கவும்.

7) மேற்படி நிலத்தினை/வீட்டு மனையை அவசியப்பட்டால் அளவு செய்து, கிரயதாரர் பெயரில் பட்டா உரிமை மாற்றம் செய்ய எந்த தலைப்பில்., எந்த அலுவலகத்தில்., எவ்வளவு பணம் செலுத்தவேண்டும் என்ற தகவலை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

8) நான் செலுத்தவேண்டிய கட்டணத்தை வங்கி காசோலை அல்லது வரைவோலையாக அனுப்பலாமா என்ற தகவலையும்., அரசு கருவூலத்தில் செலானில் தவிர வேறு எந்த எந்த முறையில் அதைச் செலுத்தலாம் என்ற தகவல்களை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

9) கிரயதாரர் பணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றால் எந்த தேதிக்குள் அப்படி கிரயதாரர் பெயரில் பட்டா உரிமை மாற்றம் செய்யப்படும் என்ற தகவலையும்., அப்படி செய்ய முடியாது என்றால் அப்படி உரிமை மாற்றம் செய்வதற்குத் தடையாக உள்ள அம்சங்களையும் அவற்றிற்கு ஆதாரமாக உள்ள ஆணையின் ஒளி நகலையும் அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

7) தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை 2-08-2006, தேதியிட்ட அரசு ஆணை எண்.114 - ன் படி தங்கள் அலுவலகத்தில் கடந்த ....................... முதல் ....................... வரை எத்தனை மனுக்களுக்கு 3 தினங்களில் ஒப்புதல் சீட்டு.,. 30 தினங்களில் இடைக்கால பதில். 60 தினங்களில் இறுதி பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றத் தகவல்களை அளிக்கக் கனிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

8) நான் கோரியத் தகவல்களை முழுமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்த மற்ற பதிலை அளிக்கும் தகவல் அலுவலருக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று தகவல் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகள் கூறுகின்றன என்றத் தகவலைக் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

9) நான் கேட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது அழிக்கப்பட்டிருந்தால், அப்படி அந்த குறிப்பிட்ட அந்த ஒவ்வொரு ஆவணமும் வைத்திருக்கவேண்டிய காலக் கெடுவினைத் தெரிவிப்பதோடு., இந்த விண்ணப்பம் சார்ந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டதைக் காட்டும் அழிப்புப் பதிவேட்டின் சம்பந்தப்பட்டப் பகுதியின் ஒளி நகல் மற்றும் அதனை அளிக்க பெறப்பட்ட உத்தரவின் ஒளிநகல் அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

10) பார்வையில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில் எனக்கு பட்டா இன்னும் எத்தனை நாட்களுக்குள் வழங்கப்படும்.

இந்த விண்ணப்பத்தில் நான் கோரியத் தகவல்தளில் ஏதாவது பிற அலுவலகத்தில் இருந்தால் அதற்காக தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 6(3) ன் படி நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கான கட்டணம் ரூ.10/-க் கான நீதி மன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்)